THE HINDU

21 DEC 2021

PAGE 3

# Last date extended

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

The Pondicherry University has extended till December 30 the last date to fill up all vacant seats for admission to various post graduate, five-year integrated post graduate and diploma courses for the academic year 2021- 22.

Interested students may directly contact the respective Heads of the Departments for spot admission, the University said in a press note.

DINA THANTHI

21 DEC 2021

PAGE 2

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# மாணவர் சேர்க்கைக்கான தேதி நீட்டிப்பு

புதுச்சேரி, டிச.21-

புதுவை காலாப்பட்டு மத்திய பல்கலைக்கழகத்தில் 2021-22ம் கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் புதுவை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

2021-22ம் கல்வி ஆண்டிற்கான பல்வேறு முதுகலை, 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுகலை மற்றும் டிப்ளமோ படிப்புகளில் உள்ள காலி இடங்கள் நிரப்பப்பட்டு வருகிறது. மாணவர் சேர்க்கைக்கான தேதி வருகிற 30-ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே விருப்பமுள்ள மாணவர்கள் நேரடி சேர்க்கைக்கு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களை நேரடியாக தொடர்பு கொண்டு காலியாக உள்ள இடங்களில் சேர்த்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DINAMALAR

21 DEC 2021

PAGE 1

# புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் மாணவர் சேர்க்கை தேதி நீடிப்பு

**புதுச்சேரி, டிச. 21–**

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் மாணவர் சேர்க்கைக்கான நாள் வரும் 30ம் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழக மக்கள் தொடர்பு பிரிவு உதவிப் பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

நடப்பு 2021–22ம் கல்வியாண்டிற்கான பல்வேறு முதுகலை, 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுகலை மற்றும் டிப்ளமோ படிப்புகளில் உள்ள அனைத்து காலி இடங்களையும் நிரப்புவதற்கான கடைசி நாள் வரும் 30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. விருப்பமுள்ள மாணவர்கள் நேரடி சேர்க்கைக்கு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு, செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

DINAMANI

21 DEC 2021

PAGE 5

# புதுவை பல்கலை. முதுநிலைப் படிப்புகளுக்கான காலியிடங்களை நிரப்ப அவகாசம்

**புதுச்சேரி, டிச. 20:** புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் நிகழாண்டு முதுநிலைப் படிப்புகளில் காலியாக உள்ள இடங்களை நிரப்ப இம்மாதம் கடைசி வரை அவகாசம் வழங்கப்பட்டது.

இதுகுறித்து புதுவை மத்திய பல்கலைக்கழகம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் 2021-22 கல்வியாண்டுக்கான பல்வேறு முதுநிலை படிப்புகள், ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுநிலை, டிப்ளமோ படிப்புகளில் உள்ள அனைத்து காலியிடங்களையும் நிரப்புவதற்கான வாய்ப்பு வருகிற 30-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. விருப்பமுள்ள மாணவர்கள், நேரடி சேர்க்கைக்கு, பல்கலைக்கழக துறைத் தலைவர்களை நேரடியாக தொடர்பு கொள்ளலாம் என பல்கலைக்கழக உதவி பதிவாளர் கி. மகேஷ் தகவல் தெரிவித்தார்.

THE HINDU TAMIL

21 DEC 2021

PAGE 5

# புதுவை பல்கலை.யில் சேர்க்கை கால நீட்டிப்பு

■ புதுச்சேரி

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் மாணவர் சேர்க்கைக்கான காலியிடங்களை நிரப்ப வரும் 30-ம் தேதி வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடரபாக பல்கலைக்கழகம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு:

2021 - 22-ம் கல்வியாண்டிற்கான பல்வேறு முதுகலை, 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுகலை மற்றும் டிப்ளமோ படிப்புகளில் உள்ள அனைத்து காலி இடங்களையும் நிரப்புவதற்கான கடைசி தேதி டிசம்பர் 30 -ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. விருப்பமுள்ள மாணவர்கள் நேரடி சேர்க்கைக்கு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

DINAKARAN

21 DEC 2021

PAGE 7

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் தேதி நீட்டிப்பு

புதுச்சேரி, டிச. 21: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பல்வேறு முதுகலை, 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுகலை மற்றும் டிப்ளமோ படிப்புகளில் உள்ள காலி இடங்களை நிரப்புவதற்கான கடைசி தேதி டிச.30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளரும், மக்கள்தொடர்பு அதிகாரியுமான மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் 2021-22ம் கல்வியாண்டிற்கான பல்வேறு முதுகலை, 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுகலை மற்றும் டிப்ளமோ படிப்புகளில் உள்ள அனைத்து காலி இடங்களையும் நிரப்புவதற்கான கடைசி தேதி டிச.30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. விருப்பமுள்ள மாணவர்கள் நேரடி சேர்க்கைக்கு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.